விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 தை 19 ஜ- அவ் 10 இதழ் 348
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 1-2-1985

## பொலிகண்டி சம்பவம்
# மக்கள் ஆலயங்களில் தஞ்சம்

(யாழ்ப்பாணம்)
பொலிகண்டியில் நேற்று அதிகாலை 4மணியளவில் இடம் பெற்ற குண்டுவெடிப்பு, குண்டுவீச்சு, துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின்போது சிலர் இறந்திருக்கலாம் என்றும், சிலர் காயமடைந்திருக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதனைத்தொடர்ந்து பீரங்கி வெடிச்சத்தங்களும் துப்பாக்கிச் சூட்டுச்சத்தங்களும் நேற்றுக் காலைவரை கேட்டவண்ணம் இருந்தன.

இந்தியாவில் இருந்து தீவிரவாத இளைஞர் கோஷ்டி வல்வெட்டித்துறைக்கு வருததாகக் கிடைத்த தகவலின்பேரில் அதிகாலைவரை ஆயுதப்படையினர் பொலிகண்டியில் சம்பந்தப்பட்டவர்களை எதிர்பார்த்திருந்த சமயம் திடீரென அவ்விடத்தை முற்றுகையிட்ட இனந்தெரியாத கோஷ்டியினர் திடீரெனக் கைக்குண்டுகளை வீசியும், துப்பாக்கிகளாலும் சுடத்தொடங்கியதாகத்தெரிய வருகிறது.

இச்சம்பவத்தின்போதுஇறந்தவர்கள் அல்லது காயமடைந்தவர்கள் அல்லது காணமல் போனவர்கள் பற்றிய தகவல்கள் எதுவும் உத்தியோகபூர்வமாகத் தெரியவில்லை.

பீரங்கியால் சுடும் சத்தங்களைத் தொடர்ந்து பீதியடைந்த இப்பகுதி மக்கள் தங்கள் இருப்பிடங்களை விட்டு வேறிடங்களுக்குத் தஞ்சம் கோரிச் சென்றுவிட்டனர்.

பொலிகண்டி, திக்கம், ஊறணி, வல்வெட்டித்துறை ஆகிய இடங்களிலுள்ள மக்களும் பீதியடைந்து இடம் பெயர்ந்துள்ளனர். இவர்கள் வதிரி, நெல்லியடி, கரவெட்டி ஆகிய பகுதிகளில் உள்ள ஆலயங்களில் தஞ்சம் கோரியுள்ளனர். இப்பகுதி மக்கள் இவர்களுக்கு வேண்டிய உதவிகளை அளித்தனர். (மா)

## ● இலங்கை இனப்பிரச்னை
# ஜனாதிபதி-சத்வால் மீண்டும் சந்திப்பு

(கொழும்பு)
ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவும், இலங்கையிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகர் திரு. எஸ். ஜே. எஸ். சத்வாலும் நேற்று மீண்டும் சந்தித்து, முக்கிய சில விஷயங்கள் குறித்து ஆலோசனை நடத்தினர்கள். ஜனாதிபதி இல்லத்தில் நேற்றுக் காலை இச்சந்திப்பு இடம்பெற்றது.

இலங்கைத் தமிழர் பிரச்னை தொடர்பாக ஜனாதிபதியும் இந்திய உயர்ஸ்தானிகரும் கடந்த வெள்ளிக்கிழமை சந்தித்து, சுமார் ஒருமணி நேரம் வரை ஆலோசனை நடத்தினர்கள்.

நேற்று, (ஒருவாரத்தில்) இரண்டாவது தடவையாக இருவரும் சந்தித்து மீண்டும் ஆராய்ந்தார்கள்.

இச்சந்திப்பின் விபரம் உடனடியாக வெளியிடப்படாத போதிலும், தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலியின் புதுடில்லி விஜயம், ஜனாதிபதி ஜே. அர் ஜெயவர்த்தனவின் இந்தியவிஜயம், புதுடில்லியில் நடைபெறவிருக்கும் ஜே ஆர் ஜெயவர்
(5-ம் பக்கம் 4-ம் கலம் பார்க்க)

## கடத்தப்பட்டவர்களைத்தேடி முல்லைத்தீவில் 'வேட்டை'

(முல்லைத்தீவு)
முல்லைததீவில் இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்ட லியோபெர்னண்டோவையும், அவரது மகன் மைக்கல் கொலின் என்பவரையும், முல்லைத்தீவு மாவட்டத்தில்நேற்று சுமார் 50 வாகனங்களில் பொதுமக்கள் சென்று தேடுதல் நடத்தினர்கள்.

தடைசெய்யப்பட்ட இடங்களான செம்மலை, நாயாறு, கொக்கிளாய், கொக்குதொடுவாய், பெரியகுளம், குமுளமுனை ஆகிய பகுதிகளில் இத்தேடுதல் நடைபெற்றது.

வாகனங்களில் வெள்ளைக் கொடிகட்டி பொதுமக்கள் இத்தேடுதலில் ஈடுபட்டார்கள். இத்தேடுதலுக்கு முல்லைத்தீவு மாவட்ட இணைப்பு அதிகாரி அனுமதி வழங்கியிருந்தார்.

கடத்தப்பட்டவர்களை விடுவிக்குமாறுகோரி முல்லைத்தீவு மாவட்டத்தை சேர்ந்த பல பொதுஸ்தாபனங்களும் துண்டுப்பிரசுரம்வெளியிட்டிருந்தன.

வாகனங்களில் ஒலிபெருக்கி கட்டி கடத்தப்பட்டவர்களை உடனடியாக விடுதலைசெய்யுமாறு வேண்டுகோள் விடுத்தார்கள்.

பொது மக்களுக்குச் சேவையாற்றியுள்ளாரென்றும் அத்துண்டுப்பிரசுரங்களில் கூறப்பட்டுள்ளது.

## யாழ். மாநகரசபையில் மீண்டும் கொள்ளை

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் மாநகரசபை மின்சாரப் பிரிவில் நேற்று வரிப்பணமான 3,700 ரூபா கொள்ளையடிக்கப்பட்டது.

நேற்று நண்பகல் அங்குவந்த 3 இனந்தெரியாதவர்கள் துப்பாக்கிமுனையில் கொள்ளையடித்ததாகக் கூறப்படுகிறது.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து மின்வரி, சோலைவரி பணம் ஏற்பது நிறுத்தப்பட்டது பணம் கட்டவந்தவர்கள் திரும்பிச் சென்றனர்.

சோலைவரி, மின்வரி பகுதிக் கட்டடக் கதவுகள் இரண்டும் நேற்றுப் பிற்பகல் மூடப்பட்டிருந்தன. [க]

## தமிழ் மக்களுடன் ஒத்துப்போகுமாறு
# பிரிட்டன் வலியுறுத்து!

(லண்டன்)
இலங்கை இனப்பிரச்னைக்குத் தீர்வுகாண்பதற்குத் தமிழ் மக்களுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி சுமுகமான தீர்வுகாணவேண்டிய தன் அவசியத்தை பிரிட்டன் வலியுறுத்தியுள்ளது.

தம்மைச் சந்தித்த வெளிநாட்டமைச்சர் ஜனப் ஏ. ஸி. எஸ் ஹமீத்திடம் பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் ஜெவ்றி கோவ் இதனை வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவது குறித்து பிரிட்டனின் கவலையையும் பிரிட்டிஷ் அமைச்சர் ஜனப் ஹமீதிடம் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் இனப்பிரச்னைக்குத் தீர்வுகாணவேண்டிய தன் அவசியத்தை வலியுறுத்திய பிரிட்டிஷ் அமைச்சர், தமிழ் இனத்தவருடன் ஒத்துப்போகுமாறு ஆலோசனை கூறியதாகவும் கூறப்படுகிறது.

## ரஜீவ் மீண்டும் கூறுகிறர்
# "இலங்கை சம்பவம் பயங்கரமானவை"

[புதுடில்லி]
இலங்கையில் நடக்கும் சம்பவங்கள் மிகவும் பயங்கரமானவை என்று இந்தியப் பிரதமர் ரஜீவ்காந்தி வர்ணித்துள்ளார்.

புதுடில்லியிலிருந்து வெளிவரும் வார சஞ்சிகை ஒன்றுக்களித்த பேட்டி ஒன்றிலேயே
[5-ம் பக்கம் 4ம்-கலம் பார்க்க]

## ஒரே கொடிமயம்!

(கொழும்பு)
கொழும்பு நகரம் முழுவதுமே கொடி மயமாகக் காட்சியளிக்கிறது

புறக்கோட்டையில் கடைக்குக்கடை இலங்கை தேசியக் கொடி பறக்கவிடப்பட்டுள்ளது.

## லொறி கடத்தல்: இளைஞர் தற்கொலை

(கிளிநொச்சி)
கடத்தப்பட்ட ஒரு லொறியிலிருந்த இளைஞர் ஒருவர் 'சைனைட்' உட்கொண்டு மரணமானர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்டியிலிருந்து மரக்கறியுடன் கிளிநொச்சிக்கு வந்துசேர்ந்த ஒரு லொறி இனந்தெரியாதவர்களினல் கடத்தப்பட்டது என்றும் வழியில்
(5-ம் பக்கம் 1-ம் கலம்பார்க்க]

# எண்மர் பலி! மன்னாரில் சம்பவம்

[கொழும்பு]
மன்னாருக்கு அருகிலுள்ள தீவிரவாதிகளின்இரகசியமறைவிடத்தை ஆயுதப்படையினர் முற்றுகையிட்டுத் தாக்கியதில் எட்டுத் தீவிரவாதிகள் பலியானதாக அறிவிக்கப்பட்டது.

25 பயங்கரவாதசந்தேகநபர்கள் காடுகளுக்குள் தப்பியோடிவிட்டதாகவும் கூறப்பட்டது.

இந்த மறைவிடத்திலிருந்து ஆயுதப்படையினர் வெடிகுண்டுகளையும், ஆயுதங்களையும், பொலிஸ், ராணுவ சீருடைகளையும் கைப்பற்றியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மறைவிடம் தமிழீழ விடுதலைப் புலிகளுடையதென்று ராணுவ வட்டாரங்கள் தெரிவிததன.

## இன்று முதல் பத்திரிகைத் தணிக்கை

[கொழும்பு]
பயங்கரவாத நடவடிக்கைகள்தொடர்பாக இன்றுமுதல் பத்திரிகை
(5-ம் பக்கம் 3-ம் கலம்பார்க்க)

## குருநகரில் கொள்ளை முயற்சி

[யாழ்ப்பாணம்]
குருநகர் வங்கியில் நேற்றுக் காலை துப்பாக்கிமுனையில் இனந்தெரியாத 3 இளைஞர்களால் கொள்ளை முயற்சி நடந்தது.

நேற்றுக்காலை வங்கிக்குச் சென்ற மூவர், வாகனததிறப்பைக் கேட்டு, அங்கு சர்ச்சைப்பட்டுக் கொண்டிருந்ததாகக் கூறப்படுகிறது.

இச்சமயம் வங்கிக்கு வந்த மக்கள் பயத்தினல் ஒதுங்கி
(6-ம் பக்கம் 3-ம் கலம் பார்க்க)

உ
சிவமயம்

திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் இரத்தாக்ஷி ஆண்டு மாசித் திங்கள் 21-ம் நாள் (3-2-85) ஞாயிற்றுக்கிழமை பகல் 11-00 மணி தொடக்கம் 12-00 மணிவரை வரும் சுபமுகூர்த்தத்தில்

எமது புத்திரன்
திருநிறை செல்வன்
கெங்காகுமாரன்
(பொறியியலாளர்
நெடுஞ்சாலை)
அவர்களுக்கும்

எமது கனிஷ்ட புத்திரி
திருநிறை செல்வி
வசந்தி
B. Com.
அவர்களுக்கும்

யாழ்ப்பாணம் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் திருமணம் செய்து வைக்கப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் சுற்றஞ்சூழ வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புரிமை தழுவி அழைக்கினறோம்.

மணவாளக்கோலம்: காலை 8 மணி முதல் 9 மணி வரை மணமகன் இல்லம்

இங்ஙனம் தங்கள் நல்வரவை விரும்பும்

திரு. திருமதி
P கதிரவேலு J P U. M.
சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும்,
62, மூன்றும் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

திரு. திருமதி
சி. தியாகராஜா.
உரிமையாளர்
எஸ் ரி ஆர் பிலிம்ஸ்,
477, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(1609)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கும் அரசினர் வைத்திய சாலைக்கும், சந்தைக்கும் அண்மையில் சண்முகம் வீதியில் 10 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு இரு துண்டுகளாகப் பிரித்தும் வாங்கலாம். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: க. க. தியாகராசா, ப. நோ. கூ. சங்கம் சாவகச்சேரி. 1624

பாவிக்கப்படாத 100 ஓடுகள் விற்பனைக்கு உண்டு தொடர்பு: 46, பிரப்பங்குளம் ஒழுங்கை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 1520

புத்தம் புதிய Honda C 70 (எக்கொனமிக் பவர்) உடன் விற்பனைக்குண்டு. ப. மகேந்திரன், 28, புது வீதி அத்தியடி 1582

வல்வெட்டித்துறை ஆலடிக் கருகாமையில் நல்லசுற்றுடலில் வீடும் வளவும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கா. சங்கரப்பிள்ளை. 1617

பூநகரி மட்டுவில்நாடு மகா வித்தியாலயத்திற்கு தெற்குப் பக்கத்தில் இருக்கும் நூறு பரப்பு தென்னம்பிள்ளை வைக்கஉகந்த காணியும் வாடியடி பலநோக்கு கூட்டுறவு சங்கத்திற்கு கிழக்கே. றோட்டோரமாக 50 பரப்பு வயலும் விற்பனைக்குண்டு. துண்டு துண்டாகவும் விற்போம். இ. கமலேந்திரம் சுதுமலை வடக்கு, மானிப்பாய். 1631

## தேவை

தறிக்கப்பட்ட இலுப்பை, வேம்பு, நாவல் மற்றும் விறகாகப் பயன்படக்கூடிய மரங்கள், தடிகள், தளபாடங்கள் ஆகியவற்றை விலைக்கு எடுக்கிறோம். விபரங்களுக்கு: 46, பிரப்பங்குளம் ஒழுங்கை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 1522

யாழ் நகரில் உள்ள வியாபார ஸ்தாபன மொன்றிற்கு 40 வயதுக்குட்பட்ட விற்பனையாளர் தேவை. ஆங்கிலத்தில் எழுத வாசிக்க தெரிந்தவர் விரும்பத்தக்கது. மின்பொறி உபகரணங்கள் தெரிந்தவராகவும், முன் வேலைசெய்த அனுபவத்துடனும் எழுத்து மூலம் 11- 2- 85க்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல; 1604, C/o, ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 1604

## வாடகைக்கு

யாழ். இந்துமகளிர் கல்லூரி மாணவியர்க்கு சாப்பாட்டுடன் சகல வசதியும் கொண்டஅறை உடன் வாடகைக்கு உண்டு. தொடர்பு கொள்க: 154/8 B, ஆத்திசூடி வீதி, யாழ். இந்து மகளிர் கல்லூரிக்கு அருகாமையில் கந்தர்மடம். 1620

## விடுதி

நல்லூரில் உள்ள வீட்டில் சகல வசதிகளுடன் கௌரவமான மாணவிகளுக்கு சாப்பாட்டுடன் தங்கும் வசதி உண்டு. விபரத்துக்கு: M ரட்னசிங்கம், 188/4, கோவில் வீதி, நல்லூர் என்னும் விலாசத்துக்குத் தொடர்பு கொள்ளவும். 1630

## காணவில்லை

வேலணை சண்முகராசா யோகேஸ்வரியின் அடையாள அட்டையை கண்டெடுத்தவர் தொடர்புகொள்க. சன்மானம் தரப்படும். சாரதா புத்தகசாலை, பஸ் நிலையம் யாழ்ப்பாணம். 1627

## வகுப்பு

Berlin - பேர்லின் போக எண்ணமா? சிறிதளவு பாஷை தெரிந்திருப்பது நல்லது. German - ஜெர்மன் பாஷை சொல்லிக் கொடுக்கப்படும். S. சொர்ணலிங்கம், இல: 4, கோபால் ஒழுங்கை, வண்ணார்பண்ணை. [மனோகரா தியேட்டர் அருகில்] 1623

## விற்பனைக்கு

350 சணல் உரச்சாக்கும், 18 அஸ்பெஸ்றஸ் 8/10 அடி கூரைத் தட்டுகளும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: மேற்பார்வையாளர், தத்துவன் கொட்டி தோட்டம், பளை. அல்லது இராமநாதன் 'அயோத்தி' பலாலிறோட், கோண்டாவில். 1626

A. மகாதேவா B Sc.
அவர்களின்


## புதிய வார இறுதி வகுப்புக்கள்

ஆரம்பமாகின்றன
02-02- 1985
85 பிரிவு
பௌதிக இரசாயனம்
9-45 Am- 10-45 Am
86 பிரிவு
வெப்ப இரசாயனம்
8-45 Am 9-45 Am
BOND INSTITUTES
Hospital Road
Jaffna.
1618

## அந்தியேட்டி - வீட்டுக்கிருத்தியம்

### பொன்னையா – கிருஷ்ணலிங்கம்

தோற்றம்: 12-1-1938 மறைவு: 3-1-1985



எமது குடும்பத்தின் ஒளி விளக்காயும் வழிகாட்டியாயும், இருந்துஎங்களைஆறாத் துயரில் ஆழ்த்திப்பிரிந்தஎங்கள் அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டி 2-2-85 சனிக்கிழமை வெள்ளைக்கடற்கரையிலும் வீட்டுக்கிருத்தியம் அன்னாரது இல்லத்திலும் நடைபெற உள்ளதால் அத்தருணம் உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரையும் பங்கு கொண்டு அவரது ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்குமாறு வேண்டுகிறோம்.

அன்னாரது மரணச் சடங்கில் கலந்து எம்துயரில் பங்குகொண்ட உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறோம்,

மனைவி, பிள்ளைகள், குடும்பத்தினர்
1625

## கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கம் பரந்தன்

## கேள்வி விண்ணப்பம்

## வெற்றுச் சாக்குகள்

எமது சங்கத்தில் உள்ள வெற்றுச் சாக்குகளுக்கு கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பம் செய்ய விரும்புபவர்கள் சாக்குகளை நேரில் பார்வையிட்டு விண்ணப்ப வைப்புப் பணம் ரூபா. 110/-(ரூபா. 100/-திருப்பி வழங்கப்படும்) செலுத்தி, விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று பூரணப்படுத்தி பதிவுத் தபால் மூலம் ''பொதுமுகாமையாளர்' கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கம், பரந்தன்.'' என்ற முகவரிக்கு 16.02.85 க்குப் பிந்தாமல் (கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்ப விபரத்தினை எழுதி அனுப்புதல் வேண்டும்.

**பொதுமுகாமையாளர்**

கரைச்சி வடக்கு
ப. நோ. கூ. சங்கம்
பரந்தன்.
1580

## பின்னுறுதிக் கட்டளைபற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை
மாவட்ட நீதிமன்றத்தில்
காலஞ்சென்ற வல்வெட்டி கனகசபாபதி பெண் முத்துப்பிள்ளை என்பவரின் மரண சாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்,
மரணமெய்தியவர்
எதிராக
1. சிவகுருநாதர் விசுவலிங்கம்
2. பெண் மகேஸ்வரி இருவரும்
நந்தாவளை, வல்வெட்டி
வல்வெட்டித்துறை
எதிர்மனுதார்.

மரணசாதன நியாயாதிக்கம் } இல. 1166/T

மனுதார்.
சரவணமுத்து கைம்பெண் சின்னம்மா. சிறீரங்கம், வட்டுக்கோட்டை கிழக்கு, வட்டுக்கோட்டை

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர்குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரண சாதனத்தை எண்பிப்பதற்காக/மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள்எவரும், 1984ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 23ஆம் நாளன்று முற்பகல் 9-45 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1984ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 1ஆம்நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

(றிச்சேட்
ஜெயராசசிங்கம்)
பதிவாளர்
நீதிமன்றக் கட்டளைப்படி
வரைந்தவர்
செல்வி வி. மகாதேவா
மனுதாரின் சட்டத்தரணி
85-3-8வரை காலம் நீடித்து வழங்கப்பட்டது. 1549

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## ஆறுண்டு நினைவஞ்லி

அமரர் பண்ணாகம் அ. தி. அப்புத்துரை
(மாஸ்டர்) அவர்கள்

''ஆறுண்டு ஆனாலும் ஆறாது உன் பிரிவு
நூறுண்டு போனாலும் மாறாது உன் நினைவு.

நண்பன்
சோம. திருச்செல்வம்.

குவைத்
1985-01-30
1628

உ

## மகா கும்பாபிஷேகம்

மண்கும்பான் வெள்ளைப்புற்றடி
அருள்மிகு
ஸ்ரீவீரசக்தி (வீரஹத்தி) விநாயகர்
ஆலய
ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன
மகாகும்பாபிஷேகம்

7-2-1985 வியாழக்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகி 11-2 1985 திங்கட்கிழமை பகல் 12மணிக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெறும்

அடியார்கள் அனைவரும் வந்து தரிசித்து
விநாயகப் பெருமானின் பேரருள் பெறக்கடவீர்!

(1615)

## பதவி வெற்றிடம்

நல்லூர் தொகுதி அபிவிருத்திக்
கூட்டுறவுச் சங்கம்

### உள்வாரி கணக்கு பரிசோதகருக்கான பதவி

**வயது:**

01-01-1985 அன்று 35 வயதிற்கு குறையாது இருத்தல் வேண்டும்.

**தகைமைகள்:**

அரசாங்க திணைக்களத்திலோ அல்லது கூட்டுத்தாபத்திலோ அல்லது வர்த்தக நிறுவனம் ஒன்றிலோ பொறுப்பு வாய்ந்த கணக்கு வேலையில் 15 வருடங்களுக்கு குறையாத அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத் திட்டம்:**

ரூபா 800 — 40×5 - 50×5 - ரூபா 1250/-
படிகள் உட்பட ஆரம்ப மாதச் சம்பளம்:-
ரூபா 1385/-

**விண்ணப்ப முடிவுத் திகதி: 28-02-1985**

தலைவர்,

திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய்.

ந. தொ. அ. கூ. சங்கம்,
(வரையறுக்கப்பட்டது)

(1614)

உ

## 45வது தின நினைவஞ்சலி

அமரர்
**கதிரவேலு மயில்வாகனம்**
சுதுமலை

தோற்றம்:
12-08-1912

மறைவு:
19-12-1984



எங்கள் இதயமெல்லாம் நிறைந்து எங்களைத் தவிக்க விட்டு எம்மைப் பிரிந்து அமரத்துவம் எய்திய அமரர் கதிரவேலு மயில்வாகனம் அவர்களின் இறுதி அஞ்சலியிலும் அவரது 45-வது தின வைபவத்திலும் பங்குபற்றிய அனைவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றியறிதலைத் தெரிவிக்கிறோம்.

மனைவி, மகன், மகள் மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

'தேவபவன்',
உடுவில் தெற்கு, மானிப்பாய். 1622

# இந்தியாவில் கட்சி மாறுதல்: தடுப்புச்சட்டம் நிறைவேறியது

## சகல உறுப்பினர்களும் ஆதரவாக வாக்களிப்பு

புதுடில்லி, ஜன. 31

இந்தியப் பாராளுமன்றம், மாநில சட்டமன்றம் ஆகியவற்றின் உறுப்பினர்கள் கட்சி மாறுதலை தடுக்கும் சட்ட மூலம் இந்திய லோக்சபாவில் சகல கட்சி உறுப்பினர்களின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது.

இந்த சட்டமூலத்தை ஆதரித்து லோக்சபாவில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளையும் சேர்ந்த 418 உறுப்பினர்கள் இதற்கு ஆதரவாக வாக்களித்தார்கள். எவரும் எதிர்த்து வாக்களிக்கவில்லை. ஒருவர் மாத்திரம் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

மத்திய பாராளுமன்றம், மாநில சட்டசபைகள் ஆகியவற்றில் பிரதித்துவம் வகிக்கும் உறுப்பினர்கள் தாம் சார்ந்திருக்கும் கட்சியை விட்டு விலகும் பட்சத்தில் அவர் உறுப்பினர்பதவியை இழப்பார்.

அதேபோன்று கட்சி உறுப்பினர் மேற்படி கட்சியிலிருந்து விலகும்போதும், கட்சி கட்டுப்பாட்டுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொண்ட போதும் அவர் கட்சியிலிருந்து நீக்கப்பட்டதாக கருதப்படுவார். ஆயினும் பாராளுமன்றம், சட்டசபை ஆகியவற்றுக்குவெளியே ஒரு உறுப்பினர் கட்சி கட்டுப்பாட்டினை மீறினல் அவர் உறுப்பினர் பதவியை இழக்கமாட்டார். பாராளுமன்றத்தில் கட்சி கட்டுப்பாட்டுக்கு எதிராகசெயல்பட்டஒரு உறுப்பினரை 15 நாட்களுக்குள் கட்சிபேலிடம் மன்னிக்கும் பட்சத்திலும் அவர் உறுப்பினர் பதவியை இழக்கமாட்டார்.

ஒரு கட்சியிலிருந்து பல உறுப்பினர்கள் கொண்டகுழு பிரிந்துசெல்லும்போது மேற்படி கட்சி உறுப்பினர்களில் மூன்றிலொருபங்குக்குக் குறைவாக இருந்தால் அவர்களும் உறுப்பினர் பதவியை இழப்பர். மூன்றிலொன்றுக்கு மேற்பட்டால் மேற்படி குழு உறுப்பினர்கள் பதவிஇழக்க மாட்டாாகள்.

மேற்படி சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்காக பிரதமர் திரு ரஜீவ் காந்தி சகல எதிர்க்கட்சித் தலைவர்களையும் சந்தித்து அவர்களின் கருத்துக்களையும் கேட்டறிந்து சட்டமூலத்தை திருத்தி அமைத்தார். இதனல் இச் சட்டம் எல்லா உறுப்பினராலும் ஆதரிக்கப்பட்டது.

"பொது வாழ்வில் ஈடுபடுபவர்களை தூய்மைப் படுத்தும் நடவடிக்கையின் முதற்படியாக இச் சட்ட மூலம் அமைந்துள்ளதென்றும் எதிர்காலத்தில் தேர்தல் முறைகளிலும் பல சீர்திருத்தங்கள் கொண்டுவரப்படவுள்ளது" என்று பிரதமர் ரஜீவ் காந்தி பாராளுமன்றத்தில் குறிப்பிட்டார்.

அமைச் காலத்தில் சகல கட்சியினரின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்ட சட்ட மூலம் இதுவாகும். (சூ)

# 63 குடும்பங்களையும் வெளியேற்ற உத்தரவு!

(வவனியா)

வவனியா தச்சன்குளம் விமானப்படை தளத்திற்கு அருகாமையில் வதித்து வந்த 63, குடும்பங்களை அங்கிருந்து வெளியேறும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது

வெளியேறும்படி பணிக்கப்பட்டுள்ள 63 குடும்பங்களுடைய காணிகளும் விமானப் படைத்தள எல்லைப்பிரதேசமாக கணிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு எந்தவித நஷ்டஈடுகளும் வழங்கப்பட மாட்டாது என அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது என்று இங்குள்ள இ தொ கா. பிரமுகர் ஒருவர் கூறினர்.

# கருப்பட்டி உற்பத்தியை அதிகரிக்க முடிவு!

(வண்ணார்பண்ணை)

இவ்வாண்டு கருப்பட்டி உற்பத்தியைஅதிகஅளவில் செய்வதென பனை அபிவிருத்திச்சபையின் இயக்குனர் குழு ஏகமனதாக முடிவு செய்தது.

நாட்டின் சூழ்நிலை எவ்வாருக இருந்த போதும் கருப்பட்டி, பனஞ்சீனி போன்ற அத்தியாவசிய பாவனைப் பொருட்களை உற்பத்தி செய்ய வேண்டிய அவசரநடவடிக்கைகளை மேற்கொள்வதென்றும், இது விடயத்தில் உற்பத்திச் சங்கங்களையும் தனியார் நிறுவனங்களையும் ஊக்குவிப்பதென்றும் இச் சபை முடிவு செய்தது.

1985-ம் ஆண்டுக்கான உத்தேச வரவு செலவுத் திட்ட அறிக்கையும் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

# சிவானந்த சிறுவர் சமயப்பாடசாலை

[யாழ்ப்பாணம்]

சிவானந்த மாதர் சங்கத்தினரால் நடாத்தபபட்டு வரும் சிவானந்த சிறுவர் சமயப்பாடசாலை கடந்த 21-ம் திகதியிலிருந்து நல்லூர் சட்டநாதர் வதயலுள்ள திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெற்று வருகிறது

எதிர்வரும் 4-ம் திகதி திங்கட்கிழமை தைப்பூச தினத்தில் ஏடுதொடக்கும் வைபவமும் காலை நடைபெறும்.

# யாழ். நகரில் மூன்று நூலகக் கிளைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பொதுசன நூலகத்திற்கு செல்வதில் ஏற்பட்டுள்ள போக்குவரத்து கஷ்டங்களைத் தொடர்ந்து நகரில் மூன்று இணை நூலகங்கள் திறக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

அரியாலை, நல்லூர், வண்ணார்பண்ணை ஆகிய இடங்களில் மார்ச் முதலாம் தேதிக்கு முன்னர் இக்கிளை நூலகங்கள் திறந்து வைக்கபபடும்.

யாழ் பொதுசன நூலகக் கமிட்டி இதற்கென ஐவரைக் கொண்ட உப குழு ஒன்றை நியமித்துள்ளது. (க)

# இலங்கையை ஆக்கிரமிக்க இந்தியா மறைமுக முயற்சி!

## 'ஆர். ஏ. டபிள்யு' ஸ்தாபனம் திட்டம் போடுகிறதாம்!!

(கொழும்பு)

"தமிழ்ப்பயங்கரவாதிகளுட்பட சில தமிழ் அரசியல் கட்சிகள் மூலமாக இந்தியா இலங்கையை மறைமுகமாக ஆக்கிரமிக்க முயல்வது தெளிவாகியுள்ளது" என்று

### ஐ. தே. க. செயல்கமிட்டி அறிக்கை

ஐ. தே. கட்சியின் செயற்கமிட்டி அறிக்கை ஒன்று தெரிவித்துள்ளது

கடந்த திங்கட்கிழமை இந்த அறிக்கை வெளியிடப்பட்டதுடன் ஜனதிபதி ஜயவர்த்தனவையும், ஏனைய எம். பிக்களையும் தமிழ்ப்பயங்கரவாதிகளுக்கு இந்தியா உதவுவதை நிறுத்தும்படி ரஜீவ்காந்தியிடம் கேட்கும்படியும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கை மேலும் தெரிவிப்பதாவது: இந்தியப்புலனய்வு ஸ்தாபனமான 'ஆர். எ. டபிள்யு' கிழக்குப்பாகிஸ்தானில் இந்தியப்படையெடுப்பை மேற்கொள்ளச் செய்து பங்களாதேஷ் என்ற நாட்டையும் ஏற்படுத்திக்கொடுத்தது.

அம்மாதிரியான படையெடுப்பையே இலங்கையிலும் மேற்கொள்ள இந்திய 'ஆர். ஏ டபிள்யு' ஸ்தாபனம் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

இந்தியாவின் இலங்கை மீதான ஆக்கிரமிப்பு, இலங்கைத் தமிழ்ப் பயங்கரவாதிகள் ஊடாக மேற்கொள்ளப்படும் ஒரு மறைமுகமான நடவடிக்கையாகும்.

பயங்கரவாதிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்களில் பல இந்திய இராணுவத் தயாரிப்புகளாகவும் காணப்படுகின்றன.

இலங்கையின் தற்போதைய போராட்டம்தமிழ்ப் பயங்கரவாதிகளுடைனதல்ல; ஆனல் இந்தியாவின் இரகசிய ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுடனுனது. (கி)

# அதிபர் இடமாற்றம்

[யாழ்ப்பாணம்]

திருநெல்வேலி இ. த. க. பாடசாலையில் கடந்த இரு வருடங்களாகக் கடமையாற்றிய அதிபர் திரு. அ. கனகரத்தினம் கடந்தமாதம் 23-ம் திகதியிலிருந்து யாழ்.கில்னர் ஒழுங்கை மெ. மி. பாடசாலை அதிபராகப் பதவியேற்றுள்ளார்.

## புலோலி ப. நோ. கூ. சங்க

# இயக்குனர்சபைக்கு இடைக்காலத் தடை!

[புலோலி]

புலோலி பல்நோக்குக் கூட்டுறவுச் சங்க இயக்குநர் சபையை இயங்கக் கூடாதென பருத்தித்துறை மாவட்ட நீதிபதி தரு ரீ. யோகநாதன் இடைக்காலத் தடையுத்தரவு ஒன்றைப் பிறப்பித்துள்ளார்.

இபபலநோக்குக் கூட்டுற சங்க இயக்குநர் தெரிவு முறையற்றதெனக் கோரி சங்க அங்கத்தவரான கே சந்திரசேகரா என்பவர் சட்டத்தரணி கே. முத்துக்குமாரு மூலம் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்ததையடுத்தே இது சம்பந்தமான விசாரணைகள் முடியும்வரை இப்பல நோக்குக் கூட்டுறவுச் சங்க இயக்குநர் சபையை இயங்கக் கூடாதென்ற இடைக்காலத் தடையுத்தரவை நீதவான் பிறப்பித்தார். மனுதாரின் விண்ணப்பத்திற்கு மாருக இயக்குநர்கள் காரணம் காட்டுவதற்குபெப்ரவரி மாதம் 15-ம் திகதிவரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

# கிறிஸ்தவமக்கள் உணர்வுகளை புண்படுத்தும் செயல்

## ஜெபநேசன் அடிகள் கண்டனம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் புனித மரியாள் சேமக்காலையில் கடந்த 9ம் திகதி நள்ளிரவு சுமார் 10 சடலங்கள் எரிக்கப்பட்ட சம்பவம் கிறிஸ்தவ மக்களின் மனங்களையும் உணர்வுகளையும் புண்படுத்தியிருப்பதாக மேற்படி சேமக்காலையின் பொறுப்பாளரும் புனித மரிமரியாள் பேராலயபங்குக் குருவுமான அருட்திரு எஸ் எச். ஜெபநேசன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

ஜெபநேசன் அடிகள் இது தொடர்பாக விடுத்துள்ள அறிக்கைவருமாறு;

யாழ். நகரிலுள்ள கத்தோலிக்க ஆலயங்கள் அனைத்தையும் சேர்ந்த கிறிஸ்தவ மக்களின் ஒரே சேமக்காலையாக புனித மரியாள் சேமக்காலை விளங்குகின்றது. இது ஒரு புனிதமான இடமகையால் அனைத்து மக்களும்இதனை புனிதம் கெடாமல் க்குவமாகவும், புனிதமாகவும் பாது காத்து வருகிறூர்கள். ஏனெனில் கிறிஸ்தவ மக்கள் சரீர உத்தானத்தில் முழு நம்பிக்கை கொண்டவர்கள். அத்துடன் இது ஒரு விசுவாச சத்தியமும் கூட.

இத்தகையபுனிதம் நிறைந்ததும்,வணக்கத்திற்குரியதுமான இந்த இடத்தில் கடந்த 9ம் திகதி நள்ளிரவு ஒருசிலர் வாகனங்கள்மூலம் ஏறக்குறைய 10 சடலங்களைக்கொண்டுவந்து எரித்துள்ளனர். இவ்விடத்திற்கு அருகாமையில் இருப்பவர்கள் பாதுகப்புப் படையினரின் வாகனங்கள் வந்து சென்றதாகக் கதைத்துக் கொள்கிறூர்கள் இச்செயல் சேமக்காலையிலுள்ள கிறிஸ்துநாதரின் திருசசிலுவைக்கு அருகாமையில் நடந்துள்ளது இத்தகாத செயல் கிறிஸ்தவ மக்களின் சமய உணர்வுகளை மிகவும் புண்படுத்தியுள்ளது. அத்துடன் இவ்விடத்தின் புனிதத் தன்மைக்குக் பங்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது இச்சேமக்காலைக்கு அருகாமையில் அரசுக்குச் சொந்தமான தகனக் கிரியைக்குரிய ஒருபொதுவான இடமிருந்தும் இந்தப் புனிதமான இடத்தை வேண்டுமென்றே அநாசாரப்படுத்தியது போன்ற இச்செயல் கவலைக்குரியதாகும். இதையிட்டு புனித மரியாள் பேராலயப் பங்குக் குருவும், இச்சேமக்

(5-ம் பக்கம் 1-ம்கலம் பார்க்க)

## 'வொய்ஸ் ஒவ் அமெரிக்கா'

# இலங்கை நிலையம் அதிநவீன சாதனங்களை கொண்டிருக்கும்

## ரூபா 30 கோடி செலவில் அமைப்புவேலைகள்

[கொழும்பு]

இலங்கையில் அமையவுள்ள 'வொய்ஸ் ஒவ் அமெரிக்கா, ஒலிபரப்பு நிலையம் அதிநவீன தொழில் நுட்பங்களுடன் கூடிய ஒலிபரப்புச் சாதனங்களைக் கொண்டிருக்குமென்று அறிவிக்கப்பட்டது.

சிலாபம், நாத்தாண்டியாப் பகுதிகளில் ஆயிரம் ஏக்கர் நிலப் பகுதி இந்த ஒலிபரப்பு நிலையத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ளது. இந்நிலையம் சுமார் ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பை வழங்குமென்றும் கூறப்பட்டது இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கும் இங்கு பயிற்சியளிக்கப்படும்.

சுமார் 300 கோடிரூபா செலவில் இந்த அமெரிக்க ஒலிபரப்பு நிலையம் அமைக்கப்படவுள்ளது. இதன் அமைவிடம் காரணமாக நூற்றுக்கணக்கான மீனவக் குடும்பங்கள் தமது சொந்த இடங்களிலிருந்து வெளியேற நேரிடுமெ அறிவிக்கப்பட்டுள்ளது ஆயினும் இக்குடும்பங்களுக்கான நஷ்டஈடு தகுந்தவகையில் வழங்கப்படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. (கி)

## வைத்திய நிபுணர்கள்
# வெளிநாடு போய் வரும் 'லீவு' பெறுவதில் ஆர்வம்!

(யாழ்ப்பாணம்)

யாழ். வைத்தியசாலை வைத்திய நிபுணர்கள் பலர் குறிப்பிட்ட சில வருடங்களுக்கு வெளிநாடு போய் வருவதற்காக வழங்கப்படும் 'லீவு'பெறுவதில் பெரும் ஆர்வம் காட்டுகின்றனர் என்று கூறப்பட்டது.

பல்கலைக்கழகக் கல்வித்துறையினர் உட்பட வைத்திய நிபுணர்களுக்கும் குறித்த சில வருடங்கள் வெளிநாடு போய் வர இந்த 'லீவு' வழங்கப்படுவதுண்டு.

சில தனியார் நிபுணர்கள் தமது சொந்தச் செலவில் வெளிநாடுகளுக்கு புறப்பட்டுள்ளனர். அரச சேவையில் உள்ளவர்கள் குறித்த அந்த லீவைப்பெறுவதற்கு விண்ணப்பித்துள்ளனராம். ஒருசிலருக்கு இந்த லீவு கிடைத்து அவர்கள் வெளிநாடு போய்விட்டதாகவும் கூறப்பட்டது.

தற்போதைய நிலைமையில் வைத்தியத்துறை நிபுணர்கள் சிலர் அச்சுறுத்தல்களுக்குள்ளாகியுள்ளனர். இது தவிர அவசர சிகிச்சைகள் மற்றும் வைத்தியதேவைகளுக்கு வைத்தியசாலைகளுக்குப் போய்வருவதில் கூட இவர்களுக்குத்தடங்கல்கள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. [கி]

## சவுதியிலிருந்து மொட்டையாகத் திரும்பிய தாதிகள்

[கொழும்பு]

சவுதி அரேபியாவிலிருந்து மூன்று இலங்கைத் தாதிகள் தலைமுடி மொட்டையடிக்கப்பட்ட நிலையில் இலங்கைக்குத் திரும்பியுள்ளனர்.

இந்திய, பாகிஸ்தானிய இளைஞர்களுடன் சவுதி அரேபியாவில் நெருங்கிய உறவு வைத்திருந்த பண்டாரகம, ஹோமாகமவைச் சேர்ந்த தாதிகளே இவ்வாறு சவுதி அரேபிய அதிகாரிகளினால் இலங்கைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

## இளம் பெண்ணின் சடலம்

(யாழ்ப்பாணம்)

தாவடி மயானத்தில் கிடந்த இளம்பெண்ணின் சடலம் நீதவானின் பணிப்பின்பேரில் யாழ் ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைத்து நேற்று பிரேத பரிசோதனை செய்யப்பட்டது.

சட்டவைத்திய அதிகாரி எஸ். சுப்பிரமணியம் பிரேத பரிசோதனைசெய்தார். இவ்விளம் பெண்ணின் சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. (மா)

## குருபூசை

[யாழ்ப்பாணம்]

கைதடி சச்சிதானந்த சுவாமிகள் ஆச்சிரமத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை சுவாமிகளின் 25-வது ஆண்டுக் குருபூசை நடைபெறும்.

சனிக்கிழமை காலை பஜனை வழிபாடும், ஞாயிற்றுக்கிழமை நண்பகல் மகேஸ்வர பூசையும் இடம்பெறும். (ப)

## வருடாந்த உற்சவம்

(சுழிபுரம்)

சுழிபுரம் கம்பனை ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் செவ்வாய்க்கிழமை முதல் ஆரம்பமாகி பன்னிரண்டு தினங்கள் சிறப்பாக நடைபெறும். பன்னிரண்டாம் நாள் பகல் சங்காபிஷேகமும் அதனைத் தொடர்ந்து திருவூஞ்சலும் நடைபெறும்.


## வெளிநாடு செல்வதற்கு

★ விமான டிக்கட்:
விசேட கட்டணத்தில் லண்டன், பரீஸ், சிங்கப்பூர், மலேசியா

SPECIAL FARE TO LONDON, PARIS, SINGAPORE AND MALAYSIA

Attractive fares to European Countries U. S. A. Canada and Australia.

★ அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் காசோலை
வார நாட்களில் காலை 8.30 முதல் 4.30 வரையும், சனிக்கிழமைகளில் காலை 9-00 முதல் நண்பகல் 12-00 வரையும் பெற்றுக் கொள்ளலாம்.

BUY YOUR AMERICAN EXPRESS TRAVELLERS CHEQUES ANYTIME BETWEEN 8-30 AND 4-30 ON WEEK DAYS AND ON SATURDAYS BETWEEN 9-00 A.M. — 12-00 NOON

★ விமான ஆசனப் பதிவுகள்
மற்றும் உங்கள் சகலபிரயாண தேவைகளுக்கும்

இன்றே நாடுங்கள்

# மக்கிரேன் டிரவல்ஸ் லிமிட்.

8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

த. பெ. எண்: 92 — போன்: 24154


## வடக்கு, கிழக்கு பகுதிகளில் இடம்பெறும்
# ராணுவ நடவடிக்கைகளுக்கு
## 20 தொழிற்சங்கங்கள் கண்டனம்

[கொழும்பு]

வடக்கு, கிழக்குப் பகுதிகளிலுள்ள தமிழ்பேசும் மக்களை இராணுவ நடவடிக்கைகள் மூலம் நசுக்கும் அரசாங்கத்தின் நடவடிக்கைகளைக் கண்டித்து, தென்பகுதியிலுள்ள இருபது தொழிற்சங்கங்கள் கூட்டறிக்கையொன்றை விடுத்துள்ளன.

அக்கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

''இந்நடவடிக்கைகள் மூலம் அரசாங்கம், இடதுசாரி மற்றும் ஜனநாயக இயக்கங்களை அழித்தொழிப்பதற்கான திட்டங்களையும் அமுல்படுத்தி வருகிறது.

''வடக்கு, கிழக்குப் பகுதிகளிலுள்ள மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் பயங்கரவாத நடவடிக்கைகளை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டுமென்று வலியுறுத்துகிறோம்.

''அரசியல் எதிரிகளையும், தொழிலாளர்களையும் மற்றும் பொது ஸ்தாபனங்களையும் நசுக்க அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துவருகிறது.

''வடக்கு, கிழக்குப் பகுதிகளில் ஊரடங்குச் சட்டம் அமுல்செய்யப்பட்டுள்ளது சில நாட்களில் இச்சட்டம் தொடர்ச்சியாக அங்கு அமுல்செய்யப்படுகிறது இப்பகுதிகளில் அப்பாவிப் பொதுமக்கள் கொலை செய்யப்படுகிறார்கள். திவைப்புச் சம்பவங்களும் நாளாந்தம் இடம்பெறுகின்றன.

''இப்பகுதிகளில் வாழும் பொதுமக்களும், தொழிலாளர்களும் பல்வேறுவிதமான அழிவுகளுக்குள்ளாகிறார்கள் இவர்களுடைய சொத்துக்கள் கொள்ளையடிக்கப் படுகின்றன. அப்பாவிப் பொதுமக்கள் குறிப்பாக இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டு, முகாம்களில் காவலில் வைக்கப்பட்டு, இம்சைப் படுத்தப்படுகிறார்கள்.

''கடந்த டிசம்பர் மாதம் 4ம் திகதி முருங்கன் தபாலகத்தில் கடமையாற்றிக் கொண்டிருந்த தபால் ஊழியர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

''மத வழிபாட்டு இடங்கள் சேதப்படுத்தப்பட்டு, அங்கு கொடூரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

''தடைசெய்யப்பட்ட வலயங்களினால் மீனவர்களும், நாளாந்த வருமானம் பெறும் தொழிலாளர்களும் பெரும் கஷ்டத்திற்குள்ளாகி நாளாந்த உணவிற்கே வசதியின்றி பாதிக்கப்பட்டுள்ளனர்.

''வடக்கு, கிழக்கு பகுதிகளிலுள்ள மக்களுக்கெதிராக மேற்கொள்ளப்படும் பயங்கரவாத நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்துமாறு அரசாங்கத்தை கேட்டுக்கொள்கிறோம்.

''வடக்கு, கிழக்கு பகுதிகளிலுள்ள மக்களுக்கு எதிராக அரசாங்கம் யுத்தத்தை ஆரம்பித்துள்ளது.

''பயங்கரவாதத்தை ஒழிப்பதற்காக, ஆரம்பிக்கப்பட்டதாகக் கூறப்படும் பாதுகாப்பு நிதியை நாம் எதிர்க்கிறோம். இந்த பாதுகாப்புநிதிக்கு வழங்கப்படும் பணம், இந்நாட்டு மக்களை நசுக்குவதற்காக வழங்கப்படும் பணமாகும்.

''இலங்கையின் இனப்பிரச்னைக்கு இராணுவநடவடிக்கைகள் மூலம் தீர்வு காணமுடியாது. இராணுவ நடவடிக்கைகளால் பல உயிரிழப்புகளும், பொருளாதாரச் சுமைகளும் தற்போது ஏற்பட்டுள்ளது.

''இலங்கையின் இனப்பிரச்னைக்கு ஜனநாயக விழிகள் மூலம் தீர்வுகாணப்பட வேண்டும்.

இக்கூட்டறிக்கையில் இலங்கை வர்த்தக ஊழியர் சங்கம், பொதுச்சேவை ஊழியர்சங்கம், இலங்கை சுதந்திர தொழிற்சங்கம், இலங்கை அரசாங்க எழுதுவினைஞர் சங்கம், இலங்கை சுதந்திர தொழிற்சங்க சம்மேளனம், இலங்கை தொழிற்சங்க சம்மேளனம் ஆகியவை உட்பட 20 தொழிற்சங்கங்கள் இதில் கைச்சாத்திட்டுள்ளன.

## தேவார, திருவாசக மனனப்போட்டிகள்

[யாழ்ப்பாணம்]

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவிருக்கும் திருமுறை முற்றோதல் விழாவையொட்டி எதிர்வரும் ஏப்ரல் மாதம் பதினெட்டு வயதுக்குட்பட்ட இளைஞர்களிடையே (26-4-1967 க்குப் பின்னர் பிறந்தவர்கள்) தேவார, திருவாசக மனனப் போட்டிகள் நான்கு, ஆதீனத்தால் நடத்தப்படவுள்ளன.

போட்டிகளுக்கென திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரம் பத்துத் திருப்பதிகங்கள், திருநாவுக்கரசு நாயனார் தேவாரம் பத்துத் திருப்பதிகங்கள், சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம் பத்துத் திருப்பதிகங்கள், மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகம் - திருச்சதகம் ஆகியன ஆதீனத்தால் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன.

இவை நான்கும் தனித்தனிப் போட்டிகளாகும். ஒருவர் எத்தனை போட்டியில் வேண்டுமானாலும் கலந்துகொள்ளலாம். குறித்த பகுதிகளை மனனஞ்செய்து பிழையற ஒப்பிக்கும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு போட்டிக்கும் தனித்தனி வெண்பொற் பதக்கம் பரிசிலாக வழங்கப்படும்.

போட்டியில் கலந்துகொள்ள விரும்புவோர் தமது முழுப் பெயர், முகவரி, பிறந்த திகதி, பாடசாலை, பங்குபற்ற விரும்பும் போட்டி ஆகிய விபரங்களைக் கொண்ட விண்ணப்பத்தை 28-2-85க்கு முன் கிடைக்கக்கூடியதாக நல்லை ஆதீனத்துக்கு அனுப்ப வேண்டும்

ஒன்றுக்கு மேற்பட்ட போட்டியில் கலந்துகொள்ள விரும்புவோர் ஒவ்வொன்றுக்கும் தனித்தனி விண்ணப்பம் அனுப்பவேண்டும். மேலதிக விபரங்களை ஆதீனத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

## பாலஸ்தாபனம்

[யாழ்ப்பாணம்]

வட்டுக்கோட்டை கிழக்கு துறட்டிப்பனை ஸ்ரீமுத்துமாரியம்பாள்பாலஸ்தாபனம்இன்று வெள்ளிக்கிழமை காலை நடைபெறவுள்ளது

சிவஸ்ரீ கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் பாலஸ்தாபனத்தை நடத்தி வைப்பார்.

## பாண்டிருப்பு முற்றுகை

(மட்டுநகர்)

கல்முனைப் பகுதியிலுள்ள பாண்டிருப்பு கிராமம் நேற்று முன்தினம் ஆயுதப்படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு சோதனையிடப்பட்டது.

## யாழ். மாவட்டத்தில்
# விசர் நாய் கடியினால் தினமும் 30 பேர் பாதிப்பு!
## தடுப்பு ஊசிக்கு தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யா□ப்பாண மாவட்டத்தில், விசர்நாய்த் தொல்லை அதிகரித்துள்ளது யாழ் ஆஸ்பத்திரிக்கு தினமும் 30 பேர் வரை சிகிச்சைக்கு வருகின்றார்கள் இதே நேரம் ஆஸ்பத்திரியில் விசர் நாய்க்கடி தடுப்பு ஊசிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள மற்றும் ஆஸ்பத்திரிகளில், விசர்நாய்க்கடி தடுப்புஊசி இல்லாததினால், தினமும் விசர் நாயினால் கடிக்கப்பட்டவர்கள் யாழ் ஆஸ்பத்திரிக்கு வருகின்றனர்

விசர்நாய்க்கடிக்கு உடனடியாக தொடர்ந்து ஊசிபோடவேண்டுமென்றும், விசர்நாய் கடித்தவருக்கு விசர் ஏற்பட்டால் அதனை சிகிச்சையளித்து மாற்ற முடியாதென்றும், அவருக்கு மரணமே முடிவு என்றும் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

## பண்டத்தரிப்பு
# மின்தறி ஆலை மூடப்பட்டது

(பண்டத்தரிப்பு)

நூல் தட்டுப்பாடு காரணமாக பண்டத்தரிப்பு பலநோக்குக்கூட்டுறவுச்சங்க மின்தறியாலை கடந்த 17-ம் திகதி தொடக்கம் மூடப்பட்டுள்ளது இந்த மின்தறியாலை இயங்க முடியாததினால் இங்கு கடமையாற்றும் சுமார் 50 நெசவாளர்களும். மற்றும் தொழில் நுட்ப ஊழியர்களும், மேற்பார்வையாளர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் இவர்களை சம்பளமற்ற லீவில் செல்லுமாறுசங்க நிர்வாகம் அறிவித்துள்ளது. தங்கள் குடும்பங்கள் இதனால் பட்டினி கிடக்கவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டிருப்பதாக ஊழியர்கள் புகார் தெரிவிக்கின்றனர் மாற்று ஒழுங்குகளை செய்து தமக்கு வேலைவழங்குமாறு இவர்கள் சங்கத்தலைவருக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

# 55 மீனவ குடும்பங்களுக்கு உதவி வழங்குங்கள்!

(பண்டத்தரிப்பு)

அரசின் கடல் கண்காணிப்பு வலயத் திட்டத்தினால்தொழில் செய்ய முடியாது பட்டினியால் வாடும் பண்டத்தரிப்பு பகுதியைச் சேர்ந்த 55 மீனவக் குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள் வழங்குமாறு வட்டுக்கோட்டை தொகுதி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் பண்டத்தரிப்பு புனித அந்தோனியார் கிளை மகஜர் ஒன்றின் மூலம் யாழ். மாவட்ட அரசாங்க அதிபரை கேட்டுள்

(5-ம் பக்கம் -ம் கலம் பார்க்க]

## லொறி கடத்தல்...

[1-ம்பக்க 3ம்கலத்தொடர்ச்சி]

ஈரப்பெரியகுளத்தில் இராணுவ முகாமுக்கு முன்பாக லொறி தடுக்கப்பட்ட போது அருகிலிருந்த ஓர் இளைஞர் மேற்படி தற்கொலை செய்ததாகவும், சாரதி விசாரணைக்குட்படுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி லொறியில் ஏராளமான உப்பு மூடைகளுடன் தீவிரவாத இயக்கத்துண்டுப் பிரசுரங்களும் இருந்தனவாம்.

## 55 மீனவர்...

[4ம்பக்க 5ம் கலத் தொடர்ச்சி]

ளது. இம் மகஜரின் பிரதிகள் யாழ். மனிதமுன்னேற்ற நடு நிலையம் யாழ். மாவட்ட இராணுவ இணைப்பு அதிகாரி பிரிகேடியர் நளின் செனிவரத்தின ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக மேற்படி கிளையின் தலைவர் ருதி. க. மரியதாஸ் தெரிவித்தார்.

## கிறிஸ்தவ

(3ம்பக்க 5ம் கலத்தொடர்ச்சி)

காலைக்குப் பொறுப்பாளியுமாகிய நான் மிகவும் வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்''.

## லண்டனில் 'லலித்'

(லண்டன்)

பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் லேடி யங்கை இலங்கையின் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலியும், வெளிநாட்டமைச்சர் ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீத்தும் நேற்றுத் தனித் தனியே சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

இலங்கை நிலைபரம் பற்றியே இவர்கள் இருவரும் பேச்சுவார்த்தைநடத்தியதாக பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சு அதிகாரியொருவர் தெரிவித்தார்.

## பத்திரிகை...

[1-ம்பக்க3-ம்கலத்தொடர்ச்சி]

தணிக்கை அமுலுக்கு வருகிறது என்று ராஜாங்க அமைச்சின் செயலாளர் நேற்றுத் தெரிவித்தார்.

பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு பாதுகாப்புப் படையினர் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் வெளிவருவதை இத் தணிக்கை கட்டுப்படுத்தும் என்றும் அவர் கூறினார்.

## ரஜீவ்...

(1-ம்பக்க 2ம்கலத்தொடர்ச்சி)

அவர் இவ்வாறு வர்ணித்தார்.

பாரதத்தில் தங்கியுள்ள 40 ஆயிரம் இலங்கைஅகதிகள் தங்கள் நாட்டுக்கு திரும்பக் கூடிய சூழ்நிலையை அங்கு உடனடியாகத் தோற்றுவிக்கவேண்டும் என்றுகூறிய பிரதமர் ரஜீவ் காந்தி, ராணுவத்தையோ அல்லது குறிப்பிட்ட இனமக்களையோ வேறு பகுதிகளில் குடியமர்த்துவது அகதிகள் திரும்பிச்செல்வதற்குஉதவாது என்றும் கூறினார்.

அரசியல்தீர்வு காண்பதன் மூலம் மட்டுமே அகதிகள் அங்கு திரும்புவதற்குவசதியை ஏற்படுத்தமுடியும் என்றார்

## ஜனாதிபதி...

[1ம் பக்க 3ம்கலத்தொடர்ச்சி]

தன ரஜீவ் காந்தி குட்டி உச்சிமகாநாடு ஆகிய விஷயங்கள் பற்றி நேற்றைய சந்திப்பில் விரிவாக ஆராயப்பட்டதாக நம்பிக்கையான வட்டாரங்கள் நேற்றிரவு தெரிவித்தன.


லிடோ சினிமா
தினசரி 10-30, 2-00
சிவாஜி-கே.ஆர். விஜயா
ரஜனி
ஜஸ்ரிஸ் கோபிநாத்

வெலிங்டன்
(யாழ். நகர்)
10-30, 2-15.
கமல் - மாதவி
டிக் டிக் டிக்
(கலர்)

றீகல் மினி
தினசரி 10-15, 1-15
மட்டும்.
மோகன், ராதிகா, நளினி
நடிக்கும்
பாலாஜியின்
ஓசை


# மரண அறிவித்தல்

## T. K. இராசரத்தினம்



T. K. இராசரத்தினம் காலமானார். இவர் முன்னைநாள் மாநகரசபை உறுப்பினரும், P.S. Dispensary உரிமையாளரும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், சாந்தகுமார் (London), கீர்த்திகுமார் (France), செல்வகுமார் (France), ஜெயகுமார் (Germany), பாலகுமார் (Canada), சந்திரகுமார் (Canada), ராஜ்குமார் (Canada), இராஜேஸ்வரி (France), கமலேஸ்வரி (Canada) ஆகியோரின் அன்புத் தந்தையும், தவராசா (France), மருதமுத்து (Canada), இந்திராணி, வாணி (France), ஜீவரேகா (France), ரதி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவர். அன்னாரின் பூதவுடல் சனிக்கிழமை 2-2-85 அன்று காலை 12-00 மணிக்கு வில்லூன்றிமயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும். (1642)

# நன்றி நவிலல்



வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து எம்மை ஆறாத் துயரில் மூழ்க விட்டு மறைந்த எங்கள் தெய்வத்தின் அகால மரணத்தன்றும் (4-12-84) அச்செய்தி கேள்விப்பட்டு(14-12-84) நேரில் வருகை தந்தும் செய்திகள் மூலம் அனுதாபங்களைத் தெரிவித்தும், ஆறுதலளித்த அனைவருக்கும் இன்று நடைபெறும் கிரியைகளிலும் எமது அழைப்பை ஏற்று வந்து கலந்து கொண்டு சிறப்பிக்கும் அனைவருக்கும் எமது உளங்கனிந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவிக்கின்றோம்

சகோதரர்கள்,
மைத்துனர்கள்.
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

''மகேந்திர வாசம்''
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

1644

# திருமண அழைப்பு

மணமகன்:

திரு. V. விஞ்ஞானகுலசிங்கம்
விவசாய பரிசோதனை உத்தியோகத்தர் (E. P.)
பிராந்திய ஆய்வு நிலையம் கரடியனாறு.

மணமகள்:

செல்வி S. மல்லிகா
(யாழ், பல்கலைக் கழக சுதேச மருத்துவபீட மாணவி)
பொதுச் சுகாதாரப் பரிசோதகர் திரு S. சிவசுப்பிரமணியம் அவர்களின் சிரேஷ்ட புத்திரி.

இடம்:

மணமகள் இல்லம்
15, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

காலம்:

02-02-1985 சனிக்கிழமை பிற்பகல் 3-00 மணி

மணமகள் இல்லத்தில் நடைபெறும் திருமண வைபவத்தில் உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திரு- ஆ. வல்லிபுரம்,
12, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

திரு திருமதி
S. சிவசுப்பிரமணியம்
15, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்

(1621)

# 31-வதுநாள் நினைவஞ்சலி

## செல்வி: ச. சர்வேஸ்வரி

(மலர்வு: 4-9-1972 — உதிர்வு: 2-1-1985)

## செல்வி: ச. பாலேஸ்வரி

(மலர்வு: 4-1-1975 — உதிர்வு: 2-1-1985)

எங்களை ஆறாத்துயரிலாழ்த்தி மீளாத்துயில்கொண்ட அன்புச் செல்வங்களே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகிறோம்.

அப்பா, அம்மா, தம்பிகள்.

வே. சண்முகநாதன் [கரம்பொன், ஊர்காவற்றுறை]
கலட்டி, கரவெட்டி மேற்கு, கரவெட்டி. 1600


1 ஸ்பெயின் பிரான்ஸ் செல்வதற்கான சகல பிரயாண ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும்.
2 குறைந்தசெலவில் கூடிய விரைவில் BERLIN செல்வதற்கான ஒழுங்குகளுக்கும் தொடர்பு கொள்ளவும்.

AIR-TRANSIT

ஏயார் ட்ரான்சிற் TRAVEL CONSULTANTS

99-2/56 B கபூர் பில்டிங்
2-வது மாடி, கொழும்பு-1.
போன்: 549365

538 (290) ஆஸ்பத்திரி வீதி,
[ஆஸ்பத்திரி முன்பாக]
யாழ்ப்பாணம். போன்: 22689



வாடிக்கையாளர்கள், வியாபாரிகள்

கவனத்திற்கு!

ஜனவரி மாதம் 1ஆம் திகதி
1985 முதல்

தோலகட்டி தயாரிப்புகளின்
புதிய விலை விபரங்கள்

| பொருட்கள் | மொத்த விலை | ஆகக்கூடிய சில்லறை விலைகள் |
|---|---|---|
| நெல்லிரசம் | 20/- | 22/50 |
| முந்திரிகை ரசம் | 21/50 | 24/50 |
| மேசை வைன் | 42/- | 48/50 |
| மருத்துவ வைன் | 57/- | 63/50 |
| பனம் சிரப் | | |
| நன்னாரி | 26/50 | 27/50 |
| மாதுளம் ரசம் | | |
| ஊறுகாய் (தேசிக்காய்) | | |
| பெரியது | 25- | 29/- |
| ,, சிறியது | 15/- | 18/ |
| ஊறுகாய் (மாங்காய்) | | |
| ,, பெரியது | 25/- | 29/- |
| ,, சிறியது | 15/ | 18/- |
| தேசிக்காய் ரசம் | 25/ | 28/ 0 |

மேற்கூறிய விலை விபரங்களுக்கு மேல் வாடிக்கையாளர்கள் செலுத்த வேண்டாமெனக் கேட்டுக் கொள்கின்றோம்.

எமது அசல் தயாரிப்புக்களை கவனித்து வாங்கவும்!

போலிகள் ஜாக்கிரதை!

எமது மொத்த விபாபாரிகள்:

ஜோ. எகட்டன்,
செனித் மார்க்கட்டிங்,
யாழ்ப்பாணம்.

செபமாலை தாசர் சபை,
தோலகட்டி,
வசாவிளான்.

(1629)

## மணிவாக்கு

அறிவும் அமைதியும் வேண்டுமென்று நித்தமும் வழுத்துகிற நீ, அவற்றைப் பெருததன் காரணம் என்ன? நீ வாக்கால் வேண்டியது ஒன்று; மனத்தாலும் காயத்தாலும் வேண்டியது மற்ருென்று; இந்த முரண்பாட்டை இன்றே அகற்றிவிடு.

—அருள் விருந்து

# நமது நோக்கு

## யுத்தமொன்று வருகுது?

கட்டாடி நெடுங்காலம் வீடு வராவிட்டால் பெட்டியின் அடியிலுள்ள பட்டு வேட்டி கட்டுவது ஒரு வழக்கம்; 'பாணுக்குத் தட்டுப்பாடென்ருல் கேக் சாப்பிடலாமே' என்ற ஆலோசனை இன்னென்று; இவை ஒரு நெருக்கடியில் எழும் வெறும் தந்திரங்கள்.

இந்த நாட்டில் இதுகாறும் நடந்துவந்தது போரல்ல; இப்போதுதான் அது உருவாகிறதென்று ராஜாங்க அமைச்சர் டாக்டர் ஆனந்த ரிஸ டி அல்விஸ் தெரிவித்திருக்கிருர்.

எனவே இப்போதுநடந்து முடிந்த சம்பவங்கள் ஒரு பெரும்போரின் ஒத்திகையாக இருக்கலாம்.

வரலாற்றில் இடம்பெறக்கூடிய அச்சுவேலி, சாவகச்சேரி, முருகண்டி என்ற தரைச் சண்டைகளும், ராமேஸ்வரம் என்ற இன்னும் முடிவடையாத கடற் சண்டையும் பெரும் போர் என்று ராஜாங்க அமைச்சர் கருதவில்லைப்போலும்.

இவை அனைத்தும் ஒரு பெரும் யுத்தத்தின் வித்து என்பது அவரின் கருத்து.

முந்திய அறிக்கைகளுக்கு இது முரண்பட்டால் சிந்தனைத் தெளிவு உண்டாகிறதென்று கொள்ளலாம்.

''பாதுகாப்புப் படையினர் கொடூரமான குழுவினருடன் போராடி வருகின்றனர்; இன்று நமது நாட்டில் யுத்தமுனை உருவாகியிருக்கிறது'' என்பதன் கருத்து என்ன?

''பயங்கரவாதிகளை இலங்கை ராணுவம் முறியடிக்க முடியாதிருக்கிறது'' என்று அறிக்கையில் திட்டவட்டமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அண்மையில் வெளியான இந்திய பாதுகாப்பு ரகசியங்களில் ஏழுபக்கம் கொண்ட தஸ்தாவேஜில் இலங்கைத் தமிழ் பயங்கரவாதிகளுடன் டில்லிக்குண்டான தொடர்பைக் காட்டுவதாக லண்டன் ஒப்சேவர் குறிப்பிட்டிருக்கிறது.

சும்மாவிடுமா ஐ. தே. கட்சி; உடனடியாக பிரதமர் காந்தியுடன் இதுபற்றி பிரஸ்தாபிக்கவும் என்ற சவாலை விடுத்திருக்கிறது அதன் செயற்குழு.

தமிழ்நாட்டின் தீவிரமும் அங்குள்ள படைப்பயிற்சியும். இங்கு நடைபெறும் தாக்குதலும் ஓய்வதாயில்லை; எனவே பெரிய இடத்துடன் போர் தொடுப்போம்' அதற்கு போதிய ஆதாரம் ''லண்டன் ஒப்சேவர்'' என்பது இச்செயற்குழுவின் அறைகூவல்.

உயிரிழந்து, உடைமை இழந்து, உண்ண உடுக்க' ஊதியம் தேட, உறங்க வசதியற்று சாவை நண்பனுகத் தழுவும் நிலையில் உள்ள பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்கள் இவ்விரண்டு தகவல்கள் பற்றி தேற்றமடைய மாட்டார்.

இன்று புலிகளுக்குவெற்றி' இனிமேல் ஒருபெரும் இலங்கை - இந்திய யுத்தம்; சின்னனில் வெற்றியென்ருல் பெரிதும் அப்படியே என்று தம்மைத்தாமே தேற்றிக் கொள்ளும் பேதையர்கள் இங்கு ஏராளம்; குறைசொல்ல இடமில்லை, அத்தகைய அனுதரவான நிலை இன்றைய நிலை.

'எங்கடை பெடியன்களின்' பிடுங்கி அடுகருத ...ல் வாறு பிரமாதமானுலும் நாட்டின் ராணுவம் இங்கு வாழும் பொ... இரக்கமின்றிச் ... ளுவதானுல் முடிவென்ன? இன்றைய நவீன ஆயுதங்களும், பக்கபலமான பத்திரிகைப்பிரசாரமும் இதனை ''பயங்கரவாத ஒழிப்பு'' என்று இன்று கூறுமாப்போல கூறிக்கொண்டிருக்க தமிழர் பிரச்னை முடிவடைந்துவிடும்.

உள்ளூர்பிரச்சனை உள்ளூரிலேயே இவ்வாறு தீர்க்கப்பட்டுவிடும்; அரசியல்தீர்வு பற்றி அலட்டிநாம் கண்ட பயன் எதுவுமில்லை. இதனைத்தட்டி கேட்கயார் உண்டு?

இவ்வளவு அழிவையும் கண்ணுரக்கண்டு, இது இலங்கையின் சொந்தப பிரச்சனை நாம் தலையிடுவதில்லையென்று சொல்லிவரும் இந்தியா 'இந்தக்கொலை தொடர்வதானுல் சும்மா பார்த்துக்கொண்டிராது' என்றும் சொ லிக்காலம் கழிக்குதே என்பது இங்கு நலிவுறும் தமிழ் மக்கள்ன நீண்டகாலக்குமுறல்.

அரசியல் தீர்வு 'அவுட்' என்ருல் ராணுவ நடவடிக்கையால் நாங்கள் 'அவுட்' என்றே கொள்ள வேண்டும்.

இலங்கைத் தமிழ் மக்களின் பேரழிவைத் தடுக்க பாரதத்தை ஆண்டவன் படைத்தான். ஆனுல் சட்டம் இடம்கொடுக்க வேண்டுப்; அல்லது விதி பலத்திருக்கவேண்டும்; விதி என்பது இலங்கை இந்தியாவுடன் போர் தொடுத்தல். இது நடைபெறுமானுல் தப்ப வழியுண்டு.

சின்ன விடயங்களில் தோல்வி காண்பவர் பெரிதில் பயப்படாதிறங்குவது ஒருவிதமனே ாவம்.


இந்தியா இலங்கைமேல் போர் தொடுக்கும் சத்தியமில்லை. தாங்கொணுக் கட்டத்தில் அங்கு புகலிடம் பெற்று நீண்டகாலம் நிரம்பிவழியும் இலங்கைத் தமிழ் மக்களைத் திருப்பி அனுப்பும் பணியில் ஒரு மட்டுப்படுத்திய ''பொலிஸ்'' நடவடிக்கை எடுப்பது'' வியப்பல்ல.

# "சுயாட்சிக்கு இணங்காவிட்டால் இலங்கையில் பூசல் நீடிக்கும்"

## 'நியூஸ்வீக்'கில் வெளியான கட்டுரை

(நியூயோர்க்)

''யாழ்ப்பாணத்திலுள்ள இலங்கை இராணுவத் துருப்புகள் உலகத்தில் மிகவும் ஒழுக்கக்கேடான இராணுவப் பிரிவுகளில் ஒன்ருக விளங்குகின்றது'' என்று கொழும்பிலுள்ள மேற்கத்திய ராஜதந்திரி ஒருவர் தெரிவித்திருப்பதாக அமெரிக்க வாரசஞ்சிகையான 'நியூஸ் வீக்' தெரிவித்துள்ளது.



('நியூஸ்வீக்' சஞ்சிகையில் வெளிவந்த புகைப்படம் இது)

'நியூஸ் வீக்' 'அச்சுவேலி தோப்பு'வில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கை குறித்து எழுதியுள்ள கட்டுரையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது. அக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய அம்சங்கள்:

''அச்சுவேலியில் இராணுவம் மெதுவாகநகர்ந்துசென்று கிளர்ச்சியாளர்கள் தங்கியிருந்த வீடொன்றை முற்றுகையிட்டு துப்பாக்கிப்பிரயோகம் செய்தது. இப்பிரயோகத்தில் 14 'தமிழ்ப்புலி' கள் கொல்லப்பட்டனர் இவர்களில் பண்டிதர் என்பவர் புலிகளின் உதவி இராணுவ கமாண்டர் என்பது குறிப்பிடத்தக்கது.

''இந்த இராணுவ நடவடிக்கை, சுமார் 5000 தமிழ்ப் பிரிவினைவாதிகளுக்கெதிரான ஒரு மிக அண்மைக்கால நடவடிக்கையாக விளங்கியுள்ளது.

''1977ம் ஆண்டிலிருந்து சிங்கள தமிழ் மக்களுக்கிடையிலானமோதல்களில் நூற்றுக்கணக்கான உயிர்கள்பலியாகியுள்ளன. இந்த இரத்தப்பகைமை காரணமாக 40 ஆயிரம் தமிழர்கள் இந்தியாவுக்கு அகதிகளாகச் சென்றுள்ளனர்.

''இஸ்ரேலிய பயங்கரவாத எதிர்ப்பு நிபுணர்களின் உதவியுடன் தமிழ் 'கெரில்லாக்களை' பேச்சுவார்த்தைக்கு இணங்கச் செய்ய ஜனதிபதி ஜெயவர்த்தன முயற்சித்தார். ஆனுல் இப்பேச்சுவார்த்தைகளுக்கான நிலைமை மங்கலாகவே இருந்தது.

''அரசியல் தீர்வு என்பது எப்போதையும்விட மிகத் தொலைவிலேயே காணப்படுகின்றது தீர்வொன்றைக்காணுவிடில் இந்தநாடு மேலும் பல ஆண்டுகளுக்குப் போர்க்களமாகவே இருக்கும்'' என்று கொழும்பிலுள்ள மேற்கத்திய இராஜதந்திரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள வேருெரு மேற்கத்திய ராஜதந்திரி கூறுவது: ''இலங்கை இராணுவம் உலகிலுள்ள ஒழுக்கக்கேடான இராணுவப்பிரிவுகளில் ஒன்ருக விளங்குகின்றது.

''இலங்கைச்சிங்கள ராணுவத்தினரே பிரச்னையின் ஒரு பகுதிக்குக் காரணமாசவுள்ளனர். இவர்கள் தமது பதிலடியாக கண்மூடித்தனமாக வீதிகளில் காணுபவர்களையெல்லாம்சுட்டுத்தள்ளுவதைவழக்கமாகக்கொண்டுள்ளனர்.

''ஜனதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன இலங்கையின் இராணுவ 'பட்ஜட்'டை 20 கோடி அமெரிக்க டாலர்களாக உயர்த்தியுள்ளார். இது மட்டுமல்லாது பிரிட்டனின் 'எஸ் ஏ. எஸ்.' அதிரடிப்பிரிவின் முன்னுள் ஊழியர்களை உதவிக்குப் பெற்றுள்ளார்.

''இதேவேளை தமிழர்களுடன் சமாதானம்பேச 'ஒலிவ் இலை' (சமாதானத்துக்கான சின்னம்) ஒன்றையும் தூக்கிப்பிடித்து நிற்கிருர்.

''அண்மையில் இலங்கை இனப்பிரச்னையை ஜே. ஆர். ஜெயவர்த்தன தீர்க்கத் தவறியதையடுத்து இலங்கை இந்திய உறவில் மேலும் விரிசல் தென்படுகிறது. இத்துடன் இலங்கைக் கடற்படைக் கப்பல் விவகாரம் இந்திய இலங்கை உறவை மேலும் சிக்கலுக்குள்ளாக்கியுள்ளது.

''ஜனதிபதி ஜெயவர்த்தன தமிழ் மிதவாதிகளைத் திருப்திபபடுத்தி அவர்களின் சுயாட்சிக்கு வழியமைப்பாரா என்பது தற்போது நிச்சயமற்றதொன்ருகக் காணப்படுகின்றது. இத்தகைய சுயாட்சிக்கு அவர் உடன்படாவிட்டால் இலங்கை பல ஆண்டுகளுக்குப் பூசல் நிரம்பியதாகவே காணப்படும். (கி)

## மரண அறிவித்தல்

### ஐ. கேசவநாதன்

கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த ஐ. கேசவநாதன் [யாழ். பல்கலைக் சழகம்] அகால மரணமானுர். அன்னுர், வி. ஐயம்பிள்ளை பூரணம் தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும், பரந்தாமன் [காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை] ஸ்ரீரங்கநாதன் (குவைத்), புவனேஸ்வரி கனகசிங்கம், உருத்திராதேவி, முத்துத்தம்பி ஆகியோரின் சகோதரருமாவார். அன்னுரின் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக இன்று நண்பகல் பன்னிரண்டு மணியளவில் கோண்டாவில் இல்லத்திலிருந்து தொட்டைக்காடு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்ருரும், உறவினர்களும், நண்பர்களும் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும். 1643

## மரண அறிவித்தல்

### திருமதி பொன்னம்மா சண்முகம்பிள்ளை

வேலணைவாசியும், காலஞ்சென்ற பிரபல நிவிற்றிகலை வர்த்தகர் திரு. சண்முகம்பிள்ளை அவர்களது மனைவியுமாகிய திருமதி பொன்னம்மா 31-1-85 மாலை சிவபதமடைந்தார். இவர் திருமதி சிவபாக்கியம் காங்கேசு, திருமதி யோகவதி இராஜரெத்தினம், திருமதி மீனும்பிகை நவரத்தினம், கதிர்காமநாதன் (நைஜீரியா), தர்மபாலன் [Probation Officer யாழ்ப்பாணம்], கோபாலபிள்ளை (வர்த்தகர் நிவிற்றிகலை. பிரியாரெக்ஸ் கொழும்பு), விமலேந்திரன் (பெருந்தோட்டம் ஹொரணை), சோமநாதன், தியாகராஜா (கனடா), பாலசுந்தரம் (மக்கள் வங்கி பிரதான தலைமை அலுவலகம் யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்னைத் தாயாரும், திரு. க. காங்கேசு (ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர் வேலணை), காலஞ்சென்ற திரு. வி. இராசரத்தினம் [ஓவசியர்], திரு பொ. நவரத்தினம் [நிலஅளவையாளர் சவுதி அரேபியா], சாரதாதேவி (ஆசிரியை நைஜீரியா), சுகுணரஞ்சிதம் [ஆசிரியை சன்மார்க்க வித்தியாலயம்], ஸ்ரீதேவி, ஞானரஞ்சிதம், மீனலோஜினி, சிவகுமாரி [கனடா], சிவயோகநாயகி ஆகியோரின் மாமியாரும் ஆவார். அன்னுரின் இறுதிக்கிரியைகள் வெள்ளிக்கிழமை 1-2-85 அன்று மாலை 1-00 மணியளவில் 40, பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணத்தில் நடைபெற்றுக் கோம்பயன்மணல் மயானத்தில் தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். 1641

## குருநகரில்'...

[1ம்பக்க 3ம்கலத் தொடர்ச்சி)

மறைந்து கொண்டார்கள் என்றும், சிலர் தரையில் படுத்துவிட்டார்கள் என்றும் தெரிய வருகிறது

அருகிலுள்ள இராணுவ முகாமிலிருந்து இராணுவத்தினர் வரத்தொடங்கவே அந்த மூவரும் சென்று விட்டனராம். (க)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி. 68ம் இலக்க அச்சகத்தில் 1985-ம்ஆண்டு பெப்ரவரி மாதம் 1-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the GeneralPost office Sri Lanka under Eelanadu 100236/81 Eelanadu P. O. Box 49, Telegram Tele phone number 22389-24126.